செ.வெ.எண்: 46 நாள்: 20.01.2017

**சித்தன்னவாசல் சுற்றுலா தளத்திற்கு ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் புதிய தார்சாலை அமைக்கப்படவுள்ளது - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், சித்தன்னவாசல் சுற்றுலாத்தளத்தில் சுற்றுலாத்துறையின் சார்பில் சுற்றுலா பொங்கல் விழாவினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இந்த சுற்றுலா பொங்கல் விழாவினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

தமிழகஅரசு சுற்றுலாத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இதன்படி தமிழர்களின் பண்பாட்டினை பாதுகாக்கும் வகையில் தமிழர் திருநாள் தைப்பொங்கல் விழாவினை சுற்றுலாத்தளத்தில் கொண்டாடி, சுற்றுலாத்தளத்தை பிரபலப்படுத்த தமிழகஅரசு உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், சித்தன்னவாசல் சுற்றுலாத்தளத்தில் சுற்றுலாப்பொங்கல் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. இதில் பச்சரிசி, வெல்லம், ஏலக்காய், பாசிப்பருப்பு, முந்திரி, உலர்திராட்சை போன்ற பொருட்களைக் கொண்டு பொங்கல் வைக்கப்பட்டது. மேலும் நாட்டுப்புற கலைஞர்கள் பங்கேற்ற தப்பாட்டம் உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்ச்சிகளும் சிறப்பாக நடத்தப்பட்டது.

மேலும் சித்தன்னவாசல் சுற்றுலாத்தளத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் படகு குளம், சிறுவர் பூங்கா, சாலை வசதி, அலங்கார வளைவுகள், குடிநீர் வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. இதே போன்று சித்தன்னவாசல் சுற்றுலாத்தளத்திற்கு சித்தன்னவாசலிலிருந்து நேரடியாக பொதுமக்கள் வரும் வகையில் ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் புதிய தார்சாலை அமைப்பதற்கான பணிகள் துவக்கப்பட்டுள்ளதுடன் விரைவில் சாலை அமைக்கப்படவுள்ளது. மேலும் இப்பொங்கல் விழாவில் பங்கெடுத்துள்ள அனைவருடைய வாழ்விலும் மகிழ்ச்சி பொங்க வாழ்த்துக்கள் தெரிவித்துக்கொள்கிறேன் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம், மாவட்ட சுற்றுலா அலுவலர் திரு.இளங்கோ, கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.வி.ராமசாமி, ஆத்மா குழுத்தலைவர் திரு.சாம்பசிவம், முன்னாள் பேரூராட்சித்தலைவர் திரு.குருபாபு, முன்னாள் பேரூராட்சி துணைத்தலைவர் திரு.பழனிச்சாமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பாஷியம், திரு.நாகராஜ், வட்டாட்சியர் (வ.கோ.நே.மு.உ.) திரு.திருமலை, முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**